24.03.. 2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.29

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.பிருந்தா | | |
| க/பெ | டாக்டர். சரவணன் | | |
| கிராமம் | சேலம் | தொழில் | |
| தாலுக்கா | சேலம் | வயது | 35/2025 |
| மாவட்டம் | சேலம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 07/05/2014 அன்று விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முண்டியம்பாக்கத்தில் அவசர சிகிச்சை பிரிவில் (சுழற்சி முறையில்) நான் பணியிலிருந்த போது மதியம் 1.05 மணிக்கு ஜெயவேல் வயது 35 , த/பெ ராஜா, கவுண்டனூர் கிராமம் , மத்தூர். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்தவரை திரு.ஜி வாசுதேவன் ஆய்வாளர் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையம் என்பவர் அழைத்து வந்தார். அவர் கூறிய விவரங்கள் பின்வருமாறு.

07/05/2014, இன்று , 12.45 மணியளவில் விழுப்புரம் இரயில்வே காவல் நிலையத்தில் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்துக்கொண்டிருந்த போது வயிற்று

வலியும்,நெஞ்சு வலியும் இருப்பதாக கூறியவரை அளவுக்கதிமாக வியர்வை காணப்பட்ட நிலையில் அவரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுய நினைவுடன் இல்லை. எந்த தூண்டுதலுக்கும் அசையவில்லை. இரண்டு கண்களும் விறிந்த நிலையிலும் , வெளிச்சத்திற்கு எந்த வித உணர்ச்சியும் காட்டாத நிலையில் இருந்தார். அவருடைய இருதய துடிப்பு கேட்கவில்லை. நுரையீரல் மூச்சு விடும் சத்தம் எதுவும் கேட்கவில்லை. நாடி துடிப்பும், மற்றும் இரத்த அழுத்தம் பதிவு செய்ய இயலவில்லை. இருதய சுருள் படலத்தில் எந்த வித துடிப்பும் காண்பிக்கப்படவில்லை. அதனால் அவர் மருத்துவமனைக்கு கொண்டுவரும் போதே இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டார் என்று சான்று வழங்கினேன். அவருக்கு இரு மேல் கைகளிலும், இரு மேல் கால் பகுதிகளிலும், பலதரப்பட்ட கன்றிய காயங்கள் காணப்பட்டன. இது சம்மந்தமாக நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ- 12 ஆகும். இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இறந்த நபர் மருத்துவமனைக்கு கொண்டு வரும் போதே இறந்த நிலையில் கொண்டுவரப்பட்டார் என்பதற்கு தனி சான்றிதழ் எதையும் வழங்கவில்லை என்றால் சரிதான். இறந்த போனவரின் உடலில் இரண்டு இடங்களில் இரு மேல் கைகள், இரண்டு மேல் தொடை பகுதிகள், ஆகியவற்றில் மட்டும் தான் நான் காயங்கள் இருந்ததை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய அறிக்கையில் காயங்களின் வயது காய்ந்த நிலையில் இருந்ததா அல்லது புதியதாக ஏற்பட்ட காயங்களா என்பதை வகைப்படுத்தவில்லை என்றால் சரிதான். காயத்தின் நிறம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவருக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்பதற்கு எந்த குற்றசாட்டும் நான் வழங்கிய காயச்சான்றில் இல்லை என்றால் சரிதான். நான் என்னுடைய அறிக்கையில் அவரது தொடையில் தான் காயம் ஏற்பட்டதாக சொன்னேனா தவிர இரண்டு கால்களில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய கருத்துரையை வைத்து எந்த நேரத்தில் அந்த நபர் இறந்தார் என்று கூறமுடியாது என்றால் சரிதான். நான் பிணவிறைப்பு தொடர்பாக எழுதவில்லை.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**மேற்படி 1, 3, 4, 5, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை இரண்டாம் எதிரி தமதாக ஏற்றுக்கொண்டார்.**

**மறுவிசாரணை**

**இல்லை**